## பொங்கல் பரிசு என சென்னை மக்கள் பூரிப்பு:

# டி.எம்.எஸ்.– வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம்!

## அமைச்சர் எம்.சி.சம்பத் இன்று ஆய்வு!!

சென்னை, டிச.6–

டி.எம்.எஸ்.– வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோரெயில்சோதனை ஓட்டம் நடைபெற்றது. தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் இன்று நேரில் ஆய்வு நடத்தினார். டி.எம்.எஸ்.– வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரெயில் சேவை அடுத்த மாதம் முதல் வாரத்தில் தொடங்கும் என்று தெரிகிறது. இதை சென்னை மக்கள், பொங்கல் பரிசு என கருதுகிறார்கள்.

டி.எம்.எஸ்.– வண்ணாரப்பேட்டை இடையே 9.5 கி.மீ தூரம்சுரங்கப்பாதைவழியாக மெட்ரோ ரயில் பணி நிறைவடைந்துள்ளது. டி.எம்.எஸ்., ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை சென்ட்ரல், உயர் நீதிமன்றம், மண்ணடி மற்றும்வண்ணாரப்பேட்டையில் மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைக்கப்பட்டு ள்ளன. மின்தடங்கள்அமைத்து, சிக்னல்அமைத்தல்உள்ளிட்ட பணிகள் நிறைவடைந்து ள்ளன. இந்நிலையில், இந்த தடத்தில் மெட்ரோ ரெயில் சோதனைஓட்டம்தொடங்கப்பட்டது. அடுத்த சில வாரங்களுக்கு மெட்ரோ ரெயில்கள் இயக்கிஆய்வுநடத்தப்படும். அதன்பிறகு, ரெயில்வே பாதுகாப்பு ஆணையரின் ஒப்புதல் பெற்று, அடுத்த மாதம் முதல் வாரத்தில் மெட்ரோ ரெயில் சேவையை தொடங்க மெட்ரோ ரெயில் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

டி.எம்.எஸ்.– வண்ணாரப்பேட்டைஇடையேஇன்னும் சில வாரங்களில் தொடங்கப்பட இருக்கும் மெட்ரோ ரெயில்சேவையைபொங்கல் பரிசு எனக் கருதி சென்னை மக்கள்பூரிப்படைந்துள்ளனர்.

மெட்ரோ ரெயில் நிறுவனம்வெளியிட்டுள்ளசெய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

டி.எம்.எஸ்.–வண்ணாரப்பேட்டைஇடையேமெட்ரோ ரெயில்சேவை தொடங்குவதற்கானசிக்னல்பரிசோதனை பணிகள் வரும் 7–ம் தேதி முதல் 22–ம் தேதி வரையில் நடக்கின்றன. இதனால், சின்னமலை–டி.எம்.எஸ். இடையேகாலை6மணிக்குபுறப்பட வேண்டிய மெட்ரோ ரெயில் சேவைமேற்கண்டநாட்களில் காலை 8 மணிக்கு தொடங்கும். ஆனால், விமான நிலையம் – சின்னமலை, பரங்கிமலை – சென்ட்ரல், விமான நிலையம் – சென்ட்ரல் வழித்தடத்தில் எந்த பாதிப்பும் இன்றி வழக்கம்போல் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படும். இவ்வாறுசெய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தமிழக தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் இன்று காலை சென்னை டி.எம்.எஸ். மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு நேரில் வந்து புதிதாக திறக்கப்படவுள்ள ஏ.ஜி.டி.எம்.எஸ்.முதல்வண்ணாரப்பேட்டை வரையிலான (சுமார் 10 கி.மீ.) சுரங்க வழித்தடப்பகுதியில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.மேலும்வண்ணாரப்பேட்டை, உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையங்களில்நடைபெற்று வரும் இறுதிக்கட்ட கட்டுமானப்பணிகளைப்பார்வையிட்டார். பணிகளைத் துரிதமாக முடிக்கும்படி, அலுவலர்களுக்குஅறிவுரைவழங்கினார். அப்போது சோதனை ஓட்டத்திற்கு தயாராக இருந்த மெட்ரோ ரெயிலில் உள்ள வசதிகளையும் பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன மேலாண்மை இயக்குனர் பங்கஜ் குமார் பன்சல் மற்றும் இயக்குனர் (திட்டங்கள்), இயக்குனர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) தலைமைப் பொது மேலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தார்கள்.



டி.எம்.எஸ்.–வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் நடைபெற்றது. அமைச்சர் எம்.சி.சம்பத் இன்று நேரில் ஆய்வு நடத்தினார். அதிகாரிகள் உடன் உள்ளனர்.